IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.137/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 1.00 p.m.

வா.சா.3 சாட்சி சசிக்குமார் த.பெ.மணி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 18.03.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி தரப்பில் அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது தாத்தாவின் இடத்தை எனது அம்மா மற்றும் எனது 3மாமாக்கள் சேர்ந்து வாதிகளுக்கு சொத்தை விற்றுள்ளனர்.

2. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இடம் ஆக்கிரமிப்பு பற்றி வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் பிரதிவாதி பாண்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எவ்வளவு செண்டு இடம் என்றால் பத்திரத்தின் அளவுப்படி விற்பனை செய்தார். எந்த வருடம் என்றால் சுமார் 2000 வருடம் ஆகும். வாதிகளின் வீட்டிற்கு அருகில்தான் நான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான்.

3. வாதிகள் சர்வேயர் மூலமாக வழக்குச் சொத்தை அளந்து பார்க்கும்போது இடப்பிரச்சனை சம்மந்தமாக எனக்கு தெரியும். வழக்குச் சொத்து பற்றிய இடப்பிரச்சனையில் எவ்வளவு இடத்திற்கு பிரச்சனை என்றால் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்து பிரச்சனையில் காவல்துறையில் புகார் அளித்தார்களா என்றால் நான் செல்லவில்லை. எனது அம்மா மற்றும் எனது மாமாவும் சேர்ந்து 16.04.1997ல் வழக்குச் சொத்தை கிரையம் செய்துள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

4. மேற்படி கிரையத்தின்போது எனக்கு எத்தனை வயது என்றால் சுமார் 20வயது ஆகும். சொத்து விற்பனை பற்றி எனக்கு முழுவிபரமும் தெரியும் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் விற்பனை செய்தது பற்றி தெரியும். வழக்குச் சொத்து பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வழக்குச்சொத்தில் பிரதிவாதி எப்போது இருந்து குடியிருக்கிறார் என்றால் எனது தாத்தாவிடமிருந்து பிரதிவாதி கிரையம் வாங்கிகொண்டார்கள், அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்யும்போது நான் அருகில் இருந்தேனா என்றால் இல்லை. வழக்குப் பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பத்திரத்தில் 2825 ச.அடி சொத்துதான் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரிதான், முழுவிபரமும் எனது மாமாவிற்குத்தான் தெரியும்.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.10p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 17:44:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.